# 8 பெண் சீடர்கள்

**லூக்கா 8:1-3, 10:38-42**

இயேசு வாழ்ந்த யூத சமூகத்தில் பெண்கள் பல்வேறு சமூக தடைகளால் ஒடுக்கப்பட்டு வாழ்ந்தனர். ஆனால் இயேசு யூத தலைவர்களின் எதிர்ப்புக்களின் மத்தியில் பெண்களுக்கு இரக்கம் காட்டி ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல "நற்செய்திப் பணி" செய்யவும் வழிகாட்டினார். அவைகளை முன்மாதிரிகளுடன் இறையரசின் வளர்ச்சிக்காக இன்றைய பெண்களின் அழைப்பை ஆராய்வோம்.

முழு மனித குலத்துக்கும் மீட்பு உரித்தாகும் வண்ணம் இயேசுவின் அன்பின் செயற்பாட்டில் ஆண், பெண் வேறுபாடு இன்றி அனைவரும் சமமாக வாழும் நிலை தோன்றியது. அன்று சமூகத்தில் ஆண்களைப் போன்று பெண்களும் நற்செய்திப் பணி செய்திட இயேசு வழி திறந்தார். இன்றும் பல பெண்கள் இறைபணி செய்வது குறிப்பிடத்தக்கது.

துணிவுடன் பணிசெய்த அண்மைக்காலத்து இரு பெண் நற்செய்திப் பணியாளர்களைக் குறித்து ஆராய்வோம்.

எலிசா எக்னிவ் என்பவர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பிறந்த பெண்மணி ஆவர். அவர் கல்வியைச் சிறப்பாகக் கற்றுப் பாடசாலை ஆசிரியராகவும் வேதாகம பாடசாலை ஆசிரியராகவும் பணி செய்தார். அவரது பெற்றோர் இறந்த பின்னர் அமெரிக்க மிஷனரி இயக்கத்தில் இணைந்து பணி செய்தார். அவர் இலங்கைக்கு வருகை தந்து யாழ்நகர் உடுவில் விடுதிப் பாடசாலையில் 40 வருடங்கள் சிறப்பாகப் பணி ஆற்றினார். ''ஜெபத்தின் ஆசிரியர்'' என்ற பட்டப் பெயர் பெற்ற அவர் உடுவில் பிரதேசத்தில் இளம் பெண்கள் மத்தியில் இறைபணி செய்தார். அவர்களது ஆன்மீக நலனுக்காக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினார். திருமறை ஆய்வு, ஜெபம் என்பவைகளை நாள்தோறும் நடாத்தி வந்தார். மூன்று சந்ததி மாணவர்களுள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இறைவனை ஏற்றுக் கொண்டதற்கான அறிக்கைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல, மறைக்கல்வியில் பட்டம், மனையியல் பாடத்தில் பட்டம் பெறுவதற்காக மாணவரைக் கல்விப் பாதையில் இட்டுச் செல்ல அதிக சிரமம் காட்டி உழைத்தார். அவரது முயற்சி வெற்றிகரமாக மலர்ந்தது. உடுவில் பிரதேசத்தில் மானிப்பாய் நகரில் பாரிய பணி ஆற்றினார். பலர் இயேசுவை அறியும் ஆசியைப் பெற்றனர். இவ்வாறான நீண்டகால நற்செய்தி மற்றும் சமூகப் பணியின் பின்னர் அவரது வேண்டுகோளுக்கு ஏற்ப 1883 இல் அவர் இறந்தவுடன் அவரது பூதவுடல் உடுவில் பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

**வேதாகம தாய்மாராக பணியாற்றிய இலங்கை பெண் நற்செய்திப் பணியாளர் ஜொயிஸ் த சில்வா**

1924 நவம்பர் மாதம் முதலாம் நாள் மீரிகம நகரின் வடக்கே கல்எலிய கிராமத்தில் செல்வந்தக் குடும்பத்தவருக்கு ஜோயிஸ் த சில்வா என்பவர் மகளாகப் பிறந்தார். அவள் சிறுவயது தொடங்கி இயேசுவை நேசித்து வாழ்ந்தவர் ஆவர். கல்எலிய மிசன் இல்லத்தில் பணியாற்றிய ஆங்கில மிஷனரி ஒருவரின் வாழ்வின் முன்மாதிரியால் சிறு வயதிலேயே இயேசுவைத் தனது மீட்பராகவும் ஆண்டவராகவும் வாழ்வில் ஏற்றுக்கொண்டார்.

தனது குடும்பத்தவரின் எதிர்ப்பைப் பாராது கடவுளின் திருப்பணிக்காக முழு மையாக தன்னை ஒப்புவித்தார். சகோதரி ஏடா பர்னாந்து என்பவரின் வாழ்வின் வழிகாட்டல் அவருக்குக் கிடைத்தது ஒரு சிறப்பம்சம் ஆகும். பப்திஸ்த திரு அவையைச் சேர்ந்த சகோதரி ஜொயிஸ் த சில்வா மெதடித்த திரு அவையைச் சேர்ந்த ஏடா பர்னாந்துடன் வயது, அவை பேதம் பாராது இணைந்து ஆற்றிய நற்செய்திப் பணி போற்றத்தக்கது. அவர்கள் சிறுவர் மத்தியில் விசேட பணி செய்தனர். நீதி மொழிகள் 22:6 இல் குறிப்பிட்டவாறு ''நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கிடு. முதுமையிலும் அவர் அந்த பழக்கத்தினை விட்டுவிட மாட்டார்.'' என்ற சத்தியத்தின் அடிப்படையில் பணி செய்தார். 1947 இல் ஆரம்பிக்கப்பட்ட சத்தியவசனம் நிறுவனத்தில் இணைந்து தற்காலிகமாக பணிசெய்திட இருவருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தேசியமயப்படுத்திய விடுமுறை கால வேதாகம பாடசாலை இயக்கத்தில் முன்னின்று இரு சகோதரிகளும் செயற்பட்டனர். இலங்கையில் பல கிராமங்களுக்குத் திரு அவைகளின் அழைப்பில் சென்று இறைவார்த்தையைப் பரப்பிடச் செயற்பட்ட இருவருக்கும் ''வேதாகம அம்மாமார்'' என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டது.

பாடல்கள் பல இயற்றி இசையமைத்தனர். எமது நாட்டில் எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் பாடப்படும் 'இயேசுவின் அன்பு...' என்னும் பாடல் அவற்றுள் சிறப்பானது. பாடலுடன், போதனையுடன் வேதாகமக் கதைகளைக் கூறிய இரு சகோதரிகளும் இறையரசைக் கட்டியெழுப்புவதில் அளப்பரிய சேவை செய்தனர். இவர்கள் எதுவித கொடைகளும், சம்பளமும் நிறுவனங்களிடம் இருந்து பெறாது ஆற்றியபணி சிறப்பானது. இறைவனுக்கு அர்ப்பணிப்புடனும் விசுவாசத் துடனும் ஆற்றிய இரு பெண் நற்செய்தி பணியாளரும் கிராமங்கள் தோறும் இறைவார்த்தையைப் பரப்பி வேதாகமத் தாய்மாராக ஆற்றிய பணி இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் மகத்தான முன்னுதாரணம் ஆகும்.

மேற்படி இரு பெண் நற்செய்திப் பணியாளரும் வாழ்ந்த சமூகத்தில் பணியை நிறை வேற்றுவதற்கான ஆற்றலும் சந்தர்ப்பமும் கிடைத்தமை இறை செயற்பாட்டின் பிரதிபலன் ஆகும்.

இயேசு தனது பணியை மேற்கொண்ட யூத சமூகம் பல்வேறு சமூகப் பிரிவாலும் கட்டுகளாலும் அமைப்பில் துன்பம் அனுபவித்து, பெண்களின் உரிமையை மறுத்து, ஆண் ஆதிக்கம் நிறைந்த யூத சமூகத்தில் பெண்களின் உரிமையை நிரூபித்து, பெண்களும் ஆண்களைப் போன்று இறை பணி ஆற்றக் கூடியவர்கள் எனும் நிலையை இயேசு உருவாக்கினார். இதனால் சமூகத்தில் மாற்றத்தை அவர் உருவாக்கினார். அதன் பிரதிவிளைவாக பெண் சீடர்கள் இயேசுவின் பணியில் பங்களிப்பு வழங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனவே இயேசுவின் பணியில் பங்களிப்பு வழங்கிய பெண் சீடர்கள் குறித்து ஆராய்வோம்.

இயேசுவின் பணிக்குப் பங்களிப்பு வழங்கிய பெண் சீடர்கள்

**வாசிப்போம்.**
**லூக்கா 8:2-3**

மேல் குறிப்பிடப்பட்ட பெண்களை விட பல்வேறு சூழல்களில் இருந்து வந்த வேறு பல பெண்கள் அவரது பணிக்குப் பங்களிப்பு வழங்கினர் என நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உரு 8.1 மார்த்தாவும் மரியாவும்

**வாசிப்போம்**
**லூக்கா 10:38-42**

| மார்த்தா | மரியா |
|---|---|
| ♦ பணிவிடை/விருந்தோம்பலுக்கு முதலிடம் அளித்தார். | ♦ இயேசுவின் காலடி அருகில் இருக்க விரும்பினாள். |
| ♦ உலக பணிகள் புரிந்து கலவரப்பட்டு கலங்கினாள். | ♦ அனைத்தையும் மறந்து இயேசு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். |
| ♦ அதனால் அவசியமானவற்றை அறிய முடியாதவளாக இருந்தாள். | ♦ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து கொண்டாள். |

இயேசுவால் பெண்களுக்குப் பணிசெய்யும் வாயில் திறக்கப்பட்டது. பெண் சீடத்துவத்தின் சவால்கள்:

- இயேசுவின் பணியில் ஈடுபட ஆண், பெண் பேதமில்லை.
- சமூக சூழல், மற்றும் வாழ்வுப் பின்னணி, இறை பணி பங்களிப்பில் பொருத்தமானது அல்ல.
- இறைபணி செய்யும் உரிமை அனைவருக்கும் உரித்தானது.
- எந்த சந்தர்ப்பத்திலும் இறைபணிக்கான அழைப்புக்கு கிடைக்கும்.
- இறை தொனியைக் கேட்டு அதற்குக் கீழ்படிய வேண்டும்.
- பணியில் உலகரீதியிலானவற்றை விட இறைவனுக்கு முதலிடம் அளிக்க வேண்டும்.
- கிறிஸ்தவ சீடத்துவத்தில் இயேசுவுடன் தனிப்பட்ட உறவு வைத்தல் அவசியம்.
- இறைவன் விரும்பும் பணி செய்தல் வேண்டும்.
- பணியின் காலத்தை விட பணியின் தன்மை முக்கியம் வாய்ந்தது.

- ஜெபத்துடனும் வழிபாட்டுடனும் பணி செய்தல் வேண்டும்.
- இயேசுவுடன் இணைந்து வாழ்ந்து பணியை வளர்த்தல் முக்கியம் ஆகும்.
- அனைத்துத் தடைகளையும் தாண்டி பணியை முன்னோக்கிக் கொண்டு செல்லுதல் அத்தியாவசியமாகும்.
- அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனும் பணியை ஆரம்பிக்கும்போது இறைவன் பணியின் வளர்ச்சிக்கு உதவி செய்வார்.

**வாழ்வில் பல ஆசிகளைப் பெறும் நாம் பிரதி பலனாக இறை பணியில் ஈடுபடுவதை இறைவன் எம்மிடம் எதிர் பார்க்கின்றார்.**

**செயற்பாடு**

1. இறைபணியில் பெண்கள் நிறைவேற்றக் கூடிய சில பணி களைக் குறிப்பிடுக.
2. அண்மைக் காலத்தில் இயேசுவின் பணி செய்த சில பெண் நற்செய்தி பணியாளர்களின் பெயர்களையும் அவர்கள் ஆற்றிய முக்கிய பணிகளையும் குறிப்பிடுக.
3. தற்காலத்தில் உலகில் பெண்கள் நற்செய்திப் பணி செய்வதில் காணப்படும் தடைகள் நீங்கி பணியின் வளர்ச்சிக்காக ஜெபம் ஒன்று எழுதுக.